V.V. Titanium Pigments Pvt. Ltd.,
A-81, Sipcot Industrial Complex,
South Veerapandiapuram PO,
Thoothukudi – 628002, Tamil Nadu, India

# வணிக கொள்கைகளின் சட்டத்தொகுப்பு

## 1.0 நிலையான வழிகாட்டுதல் / ஒழுங்குமுறை :

V.V. Titanium Pigments Private Limited (VVTi) நடத்தையால் நேர்மையுடனும், நாணயத்துடனும் வெளிப்படை தன்மையுடனும் மனித உரிமைகளுக்கு மரியாதை அளித்தும் மற்றும் எங்கள் தொழிலாளர்களின் நலன் கருதியும் எங்கள் பணியை மேற்கொள்வோம்.

மேலும் எங்கள் நிறுவனத்துடன் நல் உறவு கொண்ட அனைத்து நிறுவனத்தின் முறையான நலன்களுக்கு மதிப்பளிப்போம்.

## 2.0 சட்டத்தை மதித்தல் :

V. V. Titanium Pigments Private Limited (VVTi) அனைவரும் நிறுவனம் வணிகம் புரியும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு இணங்கி செயல்பட வேண்டும்.

## 3.0 தொழிலாளர்கள் :

i. VVTi தன்னுடைய ஊழியர்களை நிறுவனத்தின் அனைத்து கொள்கைகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் செயல்பட முடிவுகளை நல்நிதானிப்போடு எடுத்து நேர்மையான வணிகத்தை உறுதியாய் செயல்படுத்தவும் ஊக்குவிக்கிறது.

ii. அனைத்து மட்டத்திலும் உள்ள மேற்பர்வையாளர்களுக்கு கூடுதல் பொறுப்பாக மற்றும் அவர்களினிடத்தின் எதிர்பார்ப்புகளாக

a) நேர்மையுடன் செயல்பட உதாரணமாக இருந்து வழிநடத்துதல்

b) குறியீட்டிற்கு இணங்குவதை உறுதிபடுத்துவதற்காக அவர்களை சார்ந்த பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளுதல். ஞறநசவலரஜைய

c) குறியீடை நிலையாக செயல்படுத்துதல்.

VVTi'ல் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை நிறைந்த பன்முகதன்மை கொண்டு பணி செய்து நிறுவனத்தின் நல்ல செயலாக்கத்திற்கும் நற்பெயருக்கும் கலங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது தங்களின் பொறுப்பு என்பதினை உணாந்து செயல்பட வேண்டும் என நிறுவனம் எதிர்பார்க்கிறது. எங்கள் சக ஊழியர்கள்கும் வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் வணிக கூட்டாளிகளுக்கும் மரியாதை நியாயம் மற்றும் உள்ளடக்கம் கொண்ட பணியிடத்தை அமைத்து ஊக்குவிக்கிறோம் மற்றும் ஒவ்வொரு தனிநபரின் தனிப்பட்ட கௌரவம் தனியுரிமை மற்றும் பாதுகாப்பை அளிக்கிற பணிசூழலை பராமரிக்கிறோம்.

iii. எங்களது நிறுவனத்திற்கு தேவையான தொழிலாளர்களை அவர்களது படிப்பு மற்றும் திறமையை கொண்டு பணி அமர்த்துவொம். ஒவ்வொரு ஊழியர்களும் அவர்களுடைய பணியின் பொறுப்பை புரிந்துள்ளனர்கள் என்று உறுதிபடுத்துவதற்கு செயல்திறன் மேலாண்மை செயல்முறைகளை கையாழ்கிறோம். எல்லா ஊழியர்களும் பணியமர்தல், பயிற்சி, பதவி உயர்வு, இழப்பீடு மற்றும் பணிநிருத்தல் போன்ற விஷயங்களில் அவரவரின் பணி தலைப்போ அல்லது மட்டமோ சாராமல் நடத்தப்படுவார்கள்.

iv. எங்கள் நிறுவனத்தில் வேலை செய்வதற்கு ஏற்றவாறு பாதுகாப்பு நிறைந்த ஆரோக்கியமான சூழலை தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தி தருகிறோம். மேலும் நாங்கள் தொழிலாளர் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கிடையே தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் இணைந்து செயல்பட்டு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வணிகம் புரிய வழவகை செய்வோம்.

v. எங்கள் நிறுவனம் எங்களிடம் பணிபுரியும் பல நாட்டவர்களுக்கும் பண்பாடு, ஜாதி, மதம், வயது, ஆண், பெண் இன பாகுபாடின்றி அனைவருக்கும் சம உரிமையளிக்கிறது.

vi. மேலும் எங்கள் நிறுவனத்தில் பணியமர்த்தும் போது தொழிலாளர் சட்டத்திற்கு

புறம்பாக யாரையும் கட்டாய படுத்தியோ அல்லது குழந்தைகளையோ தொழிலாளர்களாக பணிக்கு அமர்த்துவதில்லை.

vii. நாங்கள் எங்கள் தொழிலாளர்களுடன் இணைந்து வேலை செய்வதன் மூலம் அவர்களது தனித்திறன்களை வெளிபடுத்தி பிரகாசிக்க பயிற்சி அளிக்கிறோம்.

நாங்கள் எங்கள் தொழிலாளர்களின் தனிநபர் மரியாதை மற்றும் சங்கச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கிறோம்.

நாங்கள் தொழிலர் ரீதியான ஆலோசனை மற்றும் நல்லுறவை தொழிலாளர்களுடன் சீராகப் பயன்படுத்துவோம்.

**4.0 வாடிக்கையாளர்கள் :**

VVTi நிறுவனம் தங்களின் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப உலகத்தரம் வாய்ந்த பொருட்களை மிகக்குறைந்த விலையில் விநியோகம் பயனீட்டாளர்களின் பாதுகாப்பையும் மனதில் கொண்டு விநியோகம் செய்கிறது. VVTi நிறுவனம் தங்களின் வாடிக்கையாளர் திருப்திக்காக அதிகம் பாடுபடும் என உறுதியளிக்கிறது. மேலும் VVTi நிறுவனம் பணிபுரியும் உழியர்கள் அனைவரும் வாடிக்கையாளர்களை தொடர்பு கொள்ளும் போது வாடிக்கையாளர் மையமாக செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கிறது.

**5.0 வணிக கூட்டாளி :**

VVTi நிறுவனத்துடன் தொழில் ரீதியாக தொடர்புடைய அனைத்து வாடிக்கையாளர் மற்றும் தொழில் பங்கீட்டாளர் அனைவரும் பயன்பெறும் வகையில் எங்கள் நிறுவனம் செயல்படும் என உறுதியளிக்கிறது.

மேலும் தொழில் ரீதியான நடவடிக்கைகள் அனைத்திலும் பங்கீட்டாளர்கள், நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் உட்பட்டு நடக்க வேண்டும் என நிறுவனம் எதிர்பார்கிறது.

**6.0 சமுதாய ஈடுபாடு :**

VVTi நிறுவனம் ஒரு நம்பிக்கைக்குரிய ஸ்தாபனமாக இருக்கும் என்றும் சமுதாயத்துடன் பின்னிப் பிணைந்த கூட்டு ஸ்தாபனமாகவும், எங்களது நிறுவனம் எங்கு செயல்படுகிறதோ அங்குள்ள சமுதாயத்தினருக்கும், இனத்தவர்களுக்கும் முழு மனதோடு செயல்பட கடுமையாக உழைக்கும்.

**7.0 பொது நடவடிக்கைகள் :**

VVTi நிறுவனம் முறையாக தொழில் புரிவோர்களை முன்னேற்ற பாடுபடும்.

VVTi நிறுவனம் அரசாங்கத்துடனோ, வேறு அமைப்புகளுடனோ நேரடியாகவோ அல்லது வியாபார சங்கங்கள் மூலமாகவோ ஏற்பாடு செய்யப்பட்ட முறையான வாணிபத்திற்கு பாதிப்பு ஏற்பட்டாலும், ஒத்துழைப்பு நல்கி பணி முடிக்க அயராது செயல்படும்.

VVTi நிறுவனம் அரசியல் கட்சிகளுக்கு ஆதாரவாகவோ, கட்சிகளுக்கு ஆதரவாக செயல்படும் கூட்டத்தினருக்கோ எந்தவித நிதியும் அளிக்காது எனவும் இச்செயல்பாடுகளில் நடுநிலையாக செயல்படும்.

**8.0 சுற்றுச்சூழல் :**

VVTi நிறுவனம் தன்னுடைய சுற்றுச்சூழல் தாக்கங்களின் நிர்வாக வளர்ச்சிக்காக பாடுபடுவது மட்டுமல்லாமல் தன்னுடைய நிலையான தொழில் நீண்ட கால இலக்கை உண்டாக்குவதற்கு உரிய மேம்பாடுகளை தொடாச்சியாக செய்யும்.

VVTi நிறுவனம் சமூக சூழலின் அக்கறையை வளர்ப்பதோடு அதனை நன்கு புரிந்து கொண்டு பின்பற்றவும், அனைவருடன் இணைந்து வேலை செய்யும்

**9.0 புதுமையான சிந்தனை :**

எங்களது புதுமையான அறிவியல் அணுகுமுறைகளை கொண்டு எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் சமுதாயத்தின் தேவைகளுக்கு மரியாதை அளிப்போம். நாங்கள் அறிவியல் பூர்வமாக தயாரிப்புகளின் தரம் மற்றும் பாதுகாப்பின் கடுமையான தரநிலைகளுக்கு உட்பட்டு செயல்படுவோம்.

**10.0 போட்டிகள் :**

VVTi நிறுவனம் நியாயமான போட்டிகளை நம்பி போட்டி சட்டங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கிறது. எங்களது நிறுவனமும் தொழிலாளர்களும் நியாயமான போட்டியின் கொள்கைகளுக்கேற்ப செயல்பட்டு நடப்பார்கள்.

**11.0 தொழில் நேர்மை :**

VVTi நிறுவனம் வணிகத்திற்காக அல்லது நிதி ஆதாயத்திற்காக யாரிடமும் தவறான அனுகூலங்கங்களை கையாள்வதோ அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ லஞ்சம் வாங்கவும் கொடுக்கவும் செய்யாது. மேலும் எந்த ஒரு தொழிலாளியும் லஞ்சம் என கருதப்படும் பணம் வழங்குதல் அல்லது பரிசு பொருட்களை கொடுப்பதும் வாங்குவதும் இல்லை. அவ்வாறு ஏதேனும் நடக்குமாயின் அதனை உடனடியாக நிராகரித்துவிட்டு உடனே நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

VVTi நிறுவனத்தின் கணக்கு பதிவுகள் மற்றும் ஆதரிக்கும் ஆவணங்கள் அடிப்படை பரிவர்த்தனையின் இயல்பான தன்மையை துல்லியமாக விவரித்து அதனை பிரதிபலிக்கும். மேலும் வெளியிடப்படாத அல்லது பதிவு செய்யப்படாத கணக்குகளோ, நிதிகளோ, சொத்துக்களோ நிறுவப்படுவதுமில்லை மற்றும் பராமரிக்கப்படுவதுமில்லை.

**12.0 நலன்களின் மோதல்கள் :**

VVTi நிறுவன தொழிலாளர்களின் சொந்த வேலையோ அல்லது நிதி நலன்களோ நிறுவனத்தில் அவர்களுடைய பொறுப்பிற்கு இடையூறு அல்லது சச்சரவு ஏற்படுத்துமாயின் அதனை தொழிலாளர்கள் தவிர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

VVTi நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்களுக்காகவோ பிறர்க்காகவோ ஆதாயம் தேடுவதற்காக தங்களது பதவியை தவறாக பயன்படுத்தகூடாது.

**13.0 இணக்கம் :**

இந்த கொள்கைகளுடன் இணைந்து செயல்படுவது எங்களது தொழில் வெற்றியின் அத்தியாவசிய ஒன்றின் பகுதியாகும். இந்த கொள்கைகளை உறுதியாக நிறுவனத்தில் பயன்படுத்தி எல்லா வகையிலும் VVTi'ல் செயல்முறைபடுத்துவது நிறுவனத்தின் இயக்குனரின் பொறுப்பு.

மேலும் இதனை மனிதவளம் மற்றும் சப்ளை சங்கிலியின் பிரதிநிதியின் உதவியுடன் பொது மேலாளர் - ஆப்பரேசன் இந்த கொள்கைகளை செயல்படுத்த வேண்டும்.

**14.0 கொள்கை மீறல் பற்றி தெரிவித்தல் :**

நிறுவனத்தில் நிகழும் கொள்கை மீறல் பற்றி எந்தவித பதிலடி குறித்த பயமும் தயக்கமும் இல்லாமல் சொல்பவர்களுக்கு நிறவனம் எப்போதும் ஆதரவும் ஊக்கமும் அளிக்கும்.

யாரேனும் (குழு உறுப்பினரோ அல்லது VVTi சார்பாக செயல்படுபரோ உட்பட) நிறுவன கொள்கைக்கு இணங்கி செயல்படாமல் இருந்தால் அவை வினியோகஸ்தர்க்கு தெரியவரும் தருவாயில் அதனை உடனே நிறுவனத்தின் மின் அஞ்சல் முகவரி personnel@vvtipigments.com மூலம் தெரியபடுத்தலாம். தொழிலாளர்கள் தங்களின் அடையாளங்களை மறைத்து பாதுகாக்கப்பட்ட வெளியீடுகளாக ASO அறை அருகிலுள்ள பரிந்துரை பெட்டியில் போடலாம். அவ்வாறு செய்ய தவறினாலும் கொள்கை மீறுதலாகவே கருதப்படும்.